# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 03.11.2020**

**முன்னிலை**

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண்.NC2951/F/2019(SA3067/F/2019)**

திரு S. ராபின் (எ) பாண்டியன் … மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர் (பகிர்மானம்)
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நாகர்கோவில் - 629 001.
கன்னியாகுமரி மாவட்டம். … பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (03.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர், செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நாகர்கோவில், கன்னியாகுமாரி மாவட்டம் அவர்கள் தொலைபேசி வாயிலாக பங்கேற்றார். மனுதாரர் திரு. S. ராபின் (எ) பாண்டியன் அவர்கள் இறந்துவிட்டதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்ததை இவ்வாணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 12.01.2019 தேதியிட்ட மனுவில், கன்னியாகுமரி, ஆரல்வாய்மொழி கணேசபுரம் குடிநீர் தேக்க தொட்டியின் அருகில் திருமதி.முத்துலெட்சுமி, க/பெ. முத்துக்குமார் என்பவரின் வீட்டிற்கு தங்கள் அலுவலகத்தின் வாயிலாக வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண் மற்றும் மேற்படி மின் இணைப்பு எந்த நாள் எந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது என்பதன் விவரம், எந்த நாள் விண்ணப்பம் ஏற்கப்பட்டு, எந்த நாள் எந்த வகையான மின் இணைப்பு வழங்கப்பட்டது,

தற்போது மேற்படி மின் இணைப்பு IA வகையாக மாற்றப்பட்டுள்ளது எனில் அதற்காக தங்கள் அலுவலகத்தில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நகல், தங்கள் அலுவலகத்தில் Tarrif VI மின் இணைப்பு பெற என்னென்ன ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும் என்பதன் விவரம் போன்ற தகவல்களை வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், செயற்பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், பார்வதிபுரம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 30 நாட்கள் கடந்தும் தகவல் அனுப்பவில்லை என்றும், தான் கோரிய தகவல்களை வழங்கக் கேட்டும், 16.02.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகு பொதுத் தகவல் அலுவலர் 18.02.2019 தேதியிட்டும், மேல்முறையீட்டு அலுவலர் 08.03.2019 தேதியிட்டும் தகவல் வழங்கியுள்ளார்கள். திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் தான் கோரிய சரியான தகவல் வழங்கப்படவில்லை என்றும், தான் கோரிய தகவல்களை வழங்க ஆணையிடவும் கேட்டு பிரிவு 19(3)ன் கீழ் 01.04.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாவது மேல்முறையீட்டின் மீது 24.10.2019 அன்று பிற்பகல் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களை 7 தினங்களுக்குள் கட்டணமின்றி வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் வழங்காத காரணத்தினால் மேல்முறையீட்டாளர் மீண்டும் இவ்வாணயத்திற்கு 16.12.2019 நாளிட்டு மனு செய்ததின் பேரில் இம்மனு மீது இன்று (03.11.2020) தொலைபேசி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்று தொலைபேசியின் வாயிலாக மேற்கொண்ட விசாரணையில், பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மனுதாரர் கோரிய முழுமையான தகவல்களை ஏற்கனவே வழங்கி விட்டதாகவும், மனுதாரர் இறந்துவிட்டதாகவும், மனுதாரரின் இறப்புச் சான்றிதழை Whatsapp செயலி மூலம் ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், மனுதாரருக்கு வழங்கிய தகவல்களை இவ்வாணையத்திற்கு மின்அஞ்சல் மற்றும் பதிவுத்தபால் வாயிலாகவும் அனுப்பிவைப்பதாகவும் தெரிவித்தார். மேற்படி பொதுத் தகவல் அலுவலரின் கூற்றின்படி மனுதாரர் இறந்துவிட்டநிலையில், அவர் தாக்கல் செய்த சட்டப்பிரிவு 6(1) மனுவும் முடிவுற்றதாக கருதி, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகின்றது.

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.NC2951/F/2019(SA3067/F/2019)</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர் (பகிர்மானம்),
தமிழ்நாடு மின்சார வாரியம்,
நாகர்கோவில் - 629 001.
கன்னியாகுமரி மாவட்டம்.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**
திரு S. ராபின் (எ) பாண்டியன்,
த/பெ. சசீதரன்,
எண்.21/79 G1, வில்லவிளை,
ஆரல்வாய்மொழி, தோவாளை வட்டம்,
கன்னியாகுமரி மாவட்டம்.

Copy to: Judgement File.
JE / PA-11.11.2020